1995 ஏப்ரல் 24]

தரைவழிப் பயணத்தில் நாம் செய்யமுடியாது. மேலும் பல்வேறு வழித்தடங்களில் வளைவான சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளில் திடீரென்று எதிர்பாராமல் பிரேக் போட வேண்டி இருக்கும். இதுபோன்ற பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தால், இது போன்ற பேருந்துகளை இயக்குவது சாத்தியமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் பெங்களூர் வழியாக இந்தப் பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டார்கள். அது எவ்வளவு கிலோமீட்டர் இருக்கிறது என்பதை நாங்கள் பரிசீலித்து குறைந்தது, 12 மணி நேரத்திலாவது பயணிகளைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இருந்தாலொழிய அதை இயக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 407—மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 408, திரு.எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

408—

கடலாழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***15769**—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

கட்டினால் மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், சீர்காழி, செம்பனார்கோவில் நல்லாறை வழியாக போக்குவரத்து ஏற்பட்டு, 50 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, இதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கட்டித் தருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதி செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் கடலி கிராமத்தில் உள்ள பாலமானது, செம்பனார் கோவில் நல்லாறை சாலையில் கி. மீ. 5/6 இல் கடலாழி ஆற்றின் குறுக்கே உள்ளது. தற்சமயம் இவ்விடத்தில் உள்ள செங்கலால் கட்டப்பட்ட குறுகிய வளைவு கொண்ட பாலம் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாலம் ஆகும். மூன்று கண்களுடைய அந்தப் பாலத்தினுடைய மேல்தளம் பழுதடைந்து, இப்போது அதைச் செப்பனிடுவதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு அந்தப் பாலம் முழுமையாகச் செப்பனிடப்பட்டிருக்கிறது. வாகனப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்படி சாலையில் கடலாழி ஆற்றின் குறுக்கே 18 மீட்டர் நீர்வழிப் பகுதி கொண்ட ஒரு உயர்மட்ட இருவழிப் பாதை கொண்ட பாலம் அமைக்க ஏறத்தாழ 36 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இப்போது இருக்கின்ற நிதி நெருக்கடி சூழ்நிலையில் புதிதாகப் பாலம் கட்டிக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த புயல் மற்றும் வெள்ளத்தால் அந்தப் பாலம் பழுதடைந்து வீணாகி உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்தேன். அதை ரிப்பேர் செய்து மட்டும் கொடுத்து இருக்கிறார்கள். 50 ஆயிரம் மக்கள் பயன்படுத்துகின்ற அந்தப் பாலத்தைச் செப்பனிட்டால்தான், பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், மாணவ மணிகளும், அரசு மருத்துவமனைக்குச் செல்வதற்கும், மற்ற இடங்களுக்குச் செல்வதற்கும் சிரமம் இல்லாமல் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே, தயவு கூர்ந்து புரட்சித் தலைவியின் அரசு எதையுமே பணத்தைப் பார்க்காமல், மக்களின் நலத்தை மட்டுமே பார்க்கின்ற அரசாக இருப்பதால் கருணைக்கூர்ந்து மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்களை நாம் செப்பனிடுவதற்கு எடுக்கின்றபோது எவ்வாறு எடுத்துக்கொள்கின்றோம் என்பதை இந்த மாமன்றத்திலே பலமுறை தெரிவித்திருக்கின்றேன். போக்குவரத்து முன்னுரிமையிலேதான் பழுதடைந்த பாலங்களை நாம் புதிதாகக் கட்டிக் கொடுக்கின்றோம். இந்தப் பாலத்தைப்

1995 ஏப்ரல் 24]

பொறுத்தமட்டில் இது பழைய பாலமாக இருந்தாலும்கூட, இப்போது போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இப்போது உடனடியாக அதிலே ஒன்றும் பிரச்சினை கிடையாது. ஆகவேதான், இனி எதிர்வரும் காலங்களில் பரிசீலிக்கலாம் என்ற அடிப்படையிலேதான் தற்போது இத்திட்டம் பரிசீலனையில் இல்லை என்று நான் தெரிவித்தேன். எதிர்வரும் ஆண்டுகளில், இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து இத்திட்டத்தைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. மூர்த்தி

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்களைப் பொறுத்தவரையில் பொதுவாக செம்பனார் கோவில், சீர்காழி, பூம்புகார் பகுதிகளில் ஆறுகள் அதிகமாக இருப்பதால் அங்கே போக்குவரத்தை இணைக்கக்கூடிய பாலங்கள் அதிகமாக உள்ளன. சில நேரங்களில் குறிப்பாக, மழை, வெள்ளக் காலங்களில் அதிகமாக அவை பாதிக்கப்பட்டு விடுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்காழி, பூம்புகார் பகுதிக்கு கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து, அந்தப் பகுதிகளில் இது போன்ற பழைய பாலங்கள் செப்பனிடும் வகையில் இருந்தால் அவற்றைப் புதிதாக கட்டுவதற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்துச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே தான் காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அங்கே சாலைகள் எல்லாம் அடிக்கடி பழுது அடைகின்றன என்ற நிலையினைக் கருத்திற் கொண்டு, உடனடியாக ஏறத்தாழ 16 கோடியே 80 லட்சம் ரூபாயை இன்றைக்கு ஒதுக்கி அந்த மாவட்டத்திற்கு மாத்திரம் சிறப்பு நிதி தந்து, அந்தப் பணிகள் எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு முன்னுரிமை அந்த மாவட்டத்திற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. காரணம் அந்தப் பகுதியிலே அதிகமாக தண்ணீர் கால்வாய்கள் போகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், சாலைகள் பாதிக்கப்படுகின்ற நிலையை உணர்ந்ததற்குப் பின்னர்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள். இருந்தாலும் பாலங்கள் பழுதடைகின்றபோது, தமிழ்நாடு முழுவதும் பாலங்களை கட்டும்போது நிதி ஆதாரங்களை அதிகமாக ஒதுக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே தான் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, எந்தெந்தப் பகுதிகள் மோசமாகப் பாதித்து இருக்கின்றன என்பதைப் பற்றி வேண்டுமானால் ஒரு ஆய்வு செய்து, எவை எவை எந்தக்

காலத்திலே தொழில்நுட்ப ரீதியாகக் கட்டப்பட வேண்டும் என்பதை அதிகாரிகளை வைத்து அந்தப் பகுதியிலே அரசு ஆய்வு செய்யும்; அதற்குப் பிறகு உரிய முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 409, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

409—

காரைக்குடியில் புதிய மின் மாற்றி அமைத்தல்

***20466**—*திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கம்பன் மணிமண்டபம் அருகில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய மின் மாற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்டு, மின் அழுத்தம் சீரடைந்துள்ளது.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாகக் கேட்டிருந்தேன். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் சீரிய முறையில் செயலாற்றி வரும் நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டு திட்டங்களைத் தீட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு-அதிகாரிகளும் தலைமை எப்படியோ அப்படியே நாங்களும்; எள் என்றால் எண்ணெய்யாக இருந்து மக்களது குறைகளை உடனடியாகக் களைந்து வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இருந்து, அனைத்துக் குறைகளையும் அப்பகுதியில் தீர்த்து வைத்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் காரைக்குடி மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு நிலையான கட்டிடம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தபோது,அதன் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 14 லட்சம் அதற்கு ஒதுக்கீடு செய்து விரைவில் பணி துவங்கி முடிய ஆவன செய்தமைக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 50 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் அதிகமாகக் கொண்டிருக்கிற நகரமாக, தெற்குப் பகுதியில் இருக்கும் 7 மாவட்டங்களில்